LIBRARY
27 APR 1966
STATE LEGISLATURE, MAD

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 29th January 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCES TO SRI T. S. CHOCKALINGAM, SRI K. S. VENKATAKRISHNA REDDIAR AND SRI B. ANANTHACHAR, FORMER MEMBERS OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

MR. SPEAKER : It is my sad duty to inform the House of the demise of—

(1) Sri T. S. Chockalingam, a former Member of the Madras Legislative Assembly from 1937–39 representing Tirunelveli General Rural Constituency, on the 9th January 1966;

(2) Sri K. S. Venkatakrishna Reddiar, a former Member of the Madras Legislative Assembly from 1946–52 representing Tindivanam General Rural Constituency, on the 14th January 1966; and

(3) Sri B. Ananthachar, a former Member of the Madras Legislative Assembly from 1937–52 representing the Hospet General Rural Constituency, on the 17th January 1966;

I request the hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed souls.

The Members stood in silence for a minute.

MR. SPEAKER : On behalf of the House, I shall convey the condolences to the members of the bereaved families.

II.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Committee on Administrative Reorganisation

*1 *Q.*—SRI S. MADHAVAN :
SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU : } Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have constituted any Committee to suggest economy in Government expenditure and administrative reorganisation ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The High Power Committee on Economy and Administrative Reorganisation constituted by the Government will go into these questions.

[29th January 1966

(*b*) The Committee consists of the following members :—

(i) Sri M. Bhaktavatsalam, *Chief Minister.*

(ii) Sri R. Venkataraman, *Minister for Industries.*

(iii) Sri V. Ramaiah, *Minister for Food.*

(iv) Sri T. A. Varghese, I.C.S.,

(v) Sri G. Ramachandran, I.A.S., *Secretary to Government, Finance Department (Member Secretary).*

A brief note[a] on the scope of work of the Committee has been separately placed on the table of the House.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் குழு செலவை சிக்கனப்படுத்துவதற்கு மட்டும்தான் நியமிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டும் பரிசீலிக்கப்படுமா ? அல்லது நிர்வாகத்திலே ஏற்கனவே இருந்த முறைகளை மாற்றி வேறு முறைகளைப் பயன்படுத்த இந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிர்வாகத்திலே மாறுதல் செய்வது பற்றியும் இந்தக் குழு பரிசிலனை செய்யும்.

திரு. சா. கணேசன் : நிர்வாகத்திலே சிக்கனப்படுத்துவதை மட்டும்தான் கவனிப்பார்களா ? அல்லது நிர்வாகத்திலே சில தேவையில்லாத அல்லது சரியாக விளங்கக்கூடியதாக இல்லாத காரணத்தினாலே ஏற்படும் அதிகப்படியான செலவினங்களுக்கான காரணங்களையும் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். 10 பைசா ஸ்டாம்ப் ஒட்டிப்போட வேண்டிய இடங்களியெல்லாம் 15 பைசா ஸ்டாம்பை ஒட்டக்கூடிய நிலை டிஸ்ட்ரிக்ட் லெவல் அல்லது ஸ்டேட் லெவலில் எல்லாம் கூட இருந்து வருகிறது. சிறு பேப்பரை வைத்து ஒட்டக்கூடிய கவருக்குக்கூட 25 பைசா ஸ்டாம்ப் ஒட்டி அனுப்பப்படுகிறது. இதையெல்லாம் கவனிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் குழுவின் கவனத்திற்கு வரக்கூடிய எல்லாவற்றையும் இது கவனிக்கும். இம்மாதிரியான தகவல்களை யெல்லாம் இந்தக் கமிட்டியாருக்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குழு தனது வேலையை முடிக்க காலவறம்பு ஏதேனும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா ? அதிகக் காலதாமதமானல் நமக்குக் கிடைக்க வேண்டிய மிச்சம் அல்லது நிர்வாக சௌகரியம் இதில் கிடைக்காமல் போய்விடும் அல்லவா ?

கனம் திரு. எம். பக்த்வத்சலம் : காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. எவ்வளவு சீக்கிரத்தில் வேலையை முடிக்கவேண்டுமோ, அவ்வாறு முடிக்கவேண்டுமென்றுதான் கவனம் செலுத்தும்.

[a] Printed as Appendix I on pages 133–135.

29th January 1966]

அப்போதைக்கப்போது குழு ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படு கின்றன. அவை அமலுக்குக் கொண்டுவரப்படும். ஏற்கனவே ஒன்று இரண்டு கூட்டங்களிலே முடிவுகள் எடுக்கப்பட்டிருக் கின்றன. அவை அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தப் பரி சிலனை செக்ரடேரியட் பொறுத்தத் துறைகள் சம்பந்தப்பட்டவரை மட்டும்தானு? அல்லது, மாவட்ட அமைப்புகளிலே உள்ள நிர்வா கத்திலேயும் கவனம் செலுத்தப்படுமா என்று அறியவிரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே செக்ரடேரியட்டை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கப்புறம் எல்லா தலைமை ஸ்தாபனங்களும் எடுத்துக்கொள்ளப்படும். மாவட்ட நிர்வாக அமைப்பும் பின்னல் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கைகள் சம்பந்தமாக முடிவுகள் எடுக்கப்படுவ தாகவும், நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்தெந்தத் துறைகளிலே எந்த அளவிற்கு சிக்கனம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை ஒரு அறிக்கையின் மூலம் இந்தச் சபைக்குத் தெரிவிக்க முதல் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வரவு செலவுத் திட்டக் கூட்டம் நடைபெறும்போது அந்தக்கூட்டம் முடிவடைவதற்குள்ளாக, மார்ச் 31-ந் தேதி வரையிலே என்னென்ன வகையிலே பரிசிலனை செய்யப்பட்டது, என்ன வகையிலே முடிவுகள் எடுக்கப்பட்டன, என்னென்ன வகையிலே அமலுக்குக் கொண்டு வரப்பட்டன என்பதையெல்லாம் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know whether this Committee has been constituted at the initiative of the Central Government or at the initiative of the State Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, this Committee has been constituted at the initiative of the State Government itself.

திரு. கி. இரா. சம்பந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் குழு செய்யும் முடிவுகள் பற்றிய விவரம் சட்டசபை அங்கத்தினர் களுக்குக் கொடுக்கப்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு முன்பே விடை அளித் தேன். எந்தெந்த முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற விவரங்கள் எல்லாம் மார்ச் 31-ந் தேதிக் குள்ள சட்டசபைக்குத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன் என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கமிட்டியிலே திரு. வர்கீஸ் அவர்கள் உறுப்பினர் என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்

[29th January 1966

தார்கள். இந்தக் கமிட்டியிலே நியமனம் செய்யும்போது எந்த அடிப்படையிலே செய்யப்பட்டது? அவரை உறுப்பினராக நியமித்து அவர் தொடர்ந்து இருப்பதற்கான காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கமிட்டி அமைக்கப் படும்போது திரு. வர்கீஸ் அவர்களை நியமனம் செய்தது பிரதம காரியதரிசி என்ற ஹோதாவிலே அல்ல. பிரதம காரியதரிசி பதவிக் காலம் தீர்ந்துவிடும் என்று அப்போதே தெரியும். திரு. வர்கீஸ் அவர்கள் அனுபவப்பட்டவர். அதனுல் தான் அவரை நியமித் திருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கமிட்டி தன்னுடைய பூர்வாங்க அறிக்கையைக் கொடுப்பதற்கு எவ்வளவு காலமாகும் ? இந்தக் குழு நியமிக்கப்பட்டு, இநத இடைவெளிக் காலத்தில் வேறு புதிய பெரிய நியமனங்கள் நமது அரசாங்கத்தால் செய்யப்பட் டனவா ? அப்படியானுல் அதை நிறுத்தி வைத்திருக்கலாம் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கமிட்டி எப்போது தன்னுடைய வேலை முழுவதையும் முடிக்கவேண்டுமென்று கால வரம்பு இல்லை என்று கூறினேன். ஆனுல், எவ்வளவு சீக்கிரத்தில் பரிசிலிக்கக் கூடுமோ, அவ்வாறு செய்யும் என்று எதிர்பார்க்கலாம். அப்போதைக்கப்போது சில முடிவுகள் எடுத்துக் கொள்ளப்படு வதை ஆராய்ந்து அமலுக்குக் கொண்டு வருவதில் கவனம் செலுத் தப்பட்டு வருகிறது என்று கூறினேன். புதிதாக ஏதாவது நியமனம் என்ருல், தவிர்க்கக்கூடாத வகையில் நியமனம் இருக் கலாம். இந்தக் கமிட்டியின் முடிவையொட்டியே, கமிட்டியின் சிபார்சை ஒட்டியே சில புதிய நியமனங்கள் இருக்கலாம். ஆனுல் சாதாரணமாகக் கூறுவேன்—சாதாரணமாக என்று திரும்பவும் சொல்கிறேன்—புதிதாக நியமனம் செய்வது என்ருல், இக் கமிட்டிக்கு அதைத் தெரிவித்து அதையும் பரிசீலனை செய்யச் சொல்லி இக்கமிட்டியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு தான் அவ்வாறு நியமனம் செய்யப்படும் சாதாரணமாக.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சிக்கனச் சீரமைப்பு காரணமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு பேர்கள் வேலை இழப் பார்கள் என்று அரசாங்கம் கருதுகிறது ? அப்படியானுல், அவர் களுக்கு மாற்று உத்தியோகம் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே அமலில் உள்ள உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் வகிக்கிற பதவிக்கு இடம் இல்லாமல் போனுலும் வேறு வகையில் அவர்கள் பதவி கொடுக்கப்படுவார்கள். திடீரென்று பதவி இழப்பவர்கள், திடீரென்று வேலை இல்லாமல் போகும் நிலைமை ஏற்படாது என்றுதான் கருதுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கொடுக்கப்பட்டிருக்கிற "டேர்ம்ஸ் ஆஃப் ரெஃப்ரன்ஸில்" இன்று நிர்வாகம் சரியான முறையில் நடைபெறுமல் இருக்க முக்கிய காரணம் மக்கள் உணர்வுகளை

29th January 1966]

சரியாகக் கவனிக்காமல் இருக்கிற காரணமும், காலதாமதமாகும் காரணமும், முடிவுகள் எடுக்க வசதிகள் இல்லாத காரணமும்தான் என்று இருப்பதால் அதையும் ஒரு அம்சமாக இந்த Definition of power ல் போட்டிருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் மக்கள் உணர்வுகளை மதித்து காலதாமதம் இல்லாமல் செய்வதற்கும் ஒரு விதி இதில் சேர்க்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மக்கள் உணர்வுகளை மதிக்க வேண்டுமா இல்லையா என்ற பிரச்னையே இல்லை, மதிக்கத்தான் வேண்டும். அதை மனதில் வைத்துத்தான் இந்தக் கமிட்டி சிபார்சு செய்யும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கமிட்டி பரிசீலனை செய்யக் கூடிய முறை என்ன ? அந்தந்த இலாகா அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேசுகிறார்களா ? கேள்வித் தாள்கள் அனுப்புகிறார்களா ? பொது மக்களிடமிருந்தும் யோசனைகள் கோரப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கென்று ஒரு தனி காரிய தரிசி, ஒரு ஐ.ஏ.எஸ். காரியதரிசி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு இலாகாவாக எடுத்துக் கொண்டு அவை எவ்வாறு நடைபெறுகிறது என்பதையெல்லாம் பரிசீலனை செய்து எவ்வாறு செய்யலாம் என்று பூர்வாங்கமாக ஒரு அறிக்கை தயாரிக்கிறார்கள். அதற்கப்புறம் இந்தக் கமிட்டியில் அது பூர்வாங்கமாக பரிசீலனை செய்யப்படுகிறது. அதற்கப்புறம் சம்பந்தப்பட்ட இலாகாவினிடம் கலந்து ஆலோசிக்கப்படுகிறது. பின்னர் மறுபடியும் பரிசீலிக்கப்பட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது. இது தவிர, உத்தியோகப் பற்றில்லாதவர்களிடமிருந்து யோசனை கேட்கும் உத்தேசம் இப்போது இல்லை. பின்னால் கமிட்டி வேலை முடிவதற்கு முன்பு அது கவனிக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சிக்கனக் கமிட்டியின் காலவரைப் பற்றி கூறப்படவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் 1967-ல் தேர்தல் நடக்க இருக்கிறது. அப்போது இன்றிருக்கும் அங்கத்தினர்கள் இருப்பார்கள் என்று கூறமுடியாது. ஆகவே, இதற்கு என்ன செய்ய இருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்தலைப் பற்றி இந்தக் கமிட்டி கருதாது.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்ட பிறகு ஓய்வு பெற்ற அதிகாரிகள் யாராவது தொடர்ந்து வேலையில் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களா ? அப்படியானால், காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. ஓய்வு பெற்ற அதிகாரிகள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் அதுவும் கமிட்டியின் சிபார்சுக்கு ஏற்றவாறிருக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : பல கேள்வித் தாள்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியின் வேலைகள் மேலும் செம்மைப் படுவதற்கு சட்ட மன்றத்திற்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்த விதிகள் பற்றிய ஒரு விவாதத்திற்கு இந்தச் சட்ட சபை தொடரிலேயே ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பூர்வாங்கமாக மார்ச் 31-ம் தேதி வரையில் எவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டு என்ன முடிவுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு எவ்வாறு அந்த முடிவுகள் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி எல்லாம் உள்ள தகவல்களை இந்த மன்றத்தில் தெரிவிக்கலாம் என்ற கருத்தை தெரிவித்தேன். அவ்வாறு தெரிவிக்கப்பட்டு அதற்கு மேல் விவாதம் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம், மன்ற அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ள எப்போதும் நான் ஆவல் உள்ளவனாக இருப்பேன்.

Revision of pension rates

*2 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to revise the rate of pension to the Madras State Pensioners in view of the rise in prices and living index ; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No Sir.

(*b*) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : ரூபாய் 20-க்கு குறைவாக ஊதியம் பெறுகிற ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஊதியத்தை உயர்த்துவதாக முதல் அமைச்சர் அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் சில நாட்களில் அரசாங்கத்தின் முடிவை இந்த மன்றம் தெரிந்து கொள்ளும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஓய்வு ஊதிய அளவை குறைந்தபட்சம் 20 ரூபாய் என்று ஆக்குவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுக்குமா ? இப்போது 20 ரூபாய்க்கு குறைந்து ஓய்வு ஊதியம் பெறுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சாதாரணமாக முதியோர்களுக்கு 20 ரூபாய் கொடுப்பது என்ற முறையை வைத்திருப்பதால் அந்தத் துறையில் அதை எதிர்பார்க்கலாம். ஆகவே, 20 ரூபாய்க்குக் குறையாமல் ஓய்வு ஊதியம் கொடுக்கும் வழியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் 20 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதென்று நான் முன்பே கூறினேன். சீக்கிரத்தில் முடிவு தெரிவிக்கப்படுமென்றும்